குறித்து விவாதித்தபொழுது சந்தவாசல் அருகில் உள்ள வெள்ளூர் கிராமத்தில் 2 மாடுகள் நோய்வாய்பட்டிருப்பதை கேள்வியுற்று அங்கு சென்று பார்த்தார். அவைகள் குந்து நோய் காய்ச்சலால் (Ephemeral Fever) பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து தகுந்த சிகிச்சையை மேற்கொண்டார்.

துரிஞ்சிக்குப்பம் பகுதியில் கால்நடை நோய் பரவி இருப்பதைப் பற்றிய தகவல் வடாற்காடு மாவட்ட ஆட்சி தலைவர் மூலம் 2—7—80 அன்று தான் அவருக்கு கிடைக்கப் பெற்றதால் உடன் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்தார். மேலும் திருவண்ணாமலை கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநரை துரிஞ்சிகுப்பத்திற்கு உடனடியாக சென்று தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணையிட்டுள்ளார்.

4. அறிவிப்பு.

ஆளுநரின் இசைவு—தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980, அறிமுகப்படுத்தவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவுத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவு

நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.